FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(பா.சூ.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.த.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101933

1. District : Virudhunagar மாவட்டம் PS: Vigilance and Anti Corruption காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 02/2026 மு.த.அ. எண் Date: 03.03.2026 நாள்

2. (I) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(II) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(III) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(Iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 09.12.2025 Date to : நாள் வரை & 29.12.2025 & 27.01.2026 & 02.03.2026

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.30 hrs Time to : நேரம் வரை 16.30 hrs 16.00 hrs 16.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.03.2026 Time : நேரம் 16.45 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.03.2026 Time : நேரம் 16.45 hrs

4. Type of Information : Written/ Oral ; தகவலின் வகை : எழுத்து முலம் / வாய் மொழியாக In typing

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 17 Kms / East

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அருப்புக்கோட்டை தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தில் வைத்து.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.சங்கரநாராயணன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.ராமகிருஷ்ணன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 19.06.1975 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் M.C. சூப்பர் மார்க்கெட் (g) Address : முகவரி கதவு எண்.4/47, பூசாரெட்டிபட்டி, பந்தல்குடி, அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி.சாந்தி, தொழிலாளர் உதவி ஆய்வாளர், அருப்புக்கோட்டை தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- வாதியால் தாமதம் -

GCP 240 34(Type 2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 03.03.2026 மாலை 16.45 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, பந்தல்குடி பூசாரெட்டிபட்டியை சேர்ந்த திரு.ராமகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு.சங்கரநாராயணன் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 03.03.2026 மாலை 18.30 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திருமதி.சாந்தி, தொழிலாளர் உதவி ஆய்வாளர், அருப்புக்கோட்டை தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2026 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/3/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அதிகாரியின் ஒப்பம்

04-03-26 at 09:30 hrs.

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BHUVANESWARAN
Rank: நிலை INSPECTOR OF POLICE
VACC, VNR.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

விருதுநகர் மாவட்ட ஊ.த.க.பிரிவு குற்ற எண்.02/2026 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.சங்கரநாராயணன் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் ரா.சங்கரநாராயணன், வயது 50/2026, த/பெ.ராமகிருஷ்ணன், கதவு எண்.4/47, பூசாரெட்டிபட்டி, பந்தல்குடி, அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, பந்தல்குடி பூசாரெட்டிபட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். பந்தல்குடி மெயின்ரோட்டில் M.C. சூப்பர் மார்க்கெட் என்கிற பெயரில் முறையாக பதிவு செய்து பல்வேறு வகையான மளிகை சாமான்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் ஆகியவற்றை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 09.12.2025 அன்று எனது சூப்பர் மார்க்கெட்டில் இருந்தபோது, அன்று மதியம் சுமார் 1.00 மணியளவில் அருப்புக்கோட்டையிலிருந்து தொழிலாளர் உதவி ஆய்வாளர் என சொல்லிக்கொண்டு எனது சூப்பர் மார்க்கெட்டுக்கு வந்தவர், சூப்பர் மார்க்கெட்டை ஆய்வு செய்வதாக சொல்லிக்கொண்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ½ கிலோ அளவில் உள்ள துவரம்பருப்பு, உளுந்தம் பருப்பு போன்ற மற்ற பொட்டல பொருட்களில் பொருளின் பெயர், நிகர எடை, தயாரிப்பு தேதி, முடிவடையும் தேதி ஆகிய விபரங்கள் ஏதும் குறிப்பிடப்படாமல் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து, மேற்படி பொருட்களை பறிமுதல் செய்து கொண்டு அருப்புக்கோட்டையிலுள்ள அவரது அலுவலகத்திற்கு வருமாறு சொல்லிவிட்டு சென்றார். ஆகையால் நான், அன்றைய தினமே (09.12.2025) மாலை சுமார் 05.30 மணியளவில் அருப்புக்கோட்டை பட்டாபிராமர் கோவில் தெருவிலுள்ள தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த தொழிலாளர் உதவி ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்களை சந்தித்தேன். அப்போது அவர், என்னிடம் தாங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொட்டல பொருட்களில் உரிய விபரங்கள் இல்லாததால், மேற்படி பொருட்களை பறிமுதல் செய்ததற்காக ஒரு நோட்டீஸை கொடுத்தார். பின்னர் அவர், என்னிடம் இதற்கு அபராத தொகையாக ரூ.5,000/- விதிக்கப்படும் என்றும், இந்த அபராத தொகைக்குரிய ரசீதை தொழிலாளர்துறை உதவி ஆணையாளரிடமிருந்து உத்தரவு வந்தபிறகு கொடுத்துவிடுவதாகவும், மேலும் பொருட்களை பொட்டலமாக போட்டு விற்பனை செய்வதற்கு உரிய உரிமம் பெற வேண்டுமென்றும், அந்த பொட்டல உரிமம் பெறாமல் விற்பனை செய்தால் தொழிலாளர் துறையினரால் தங்களுக்கு தேவையில்லாத தொந்தரவுகளும், தொடர்ந்து அபராதம் செலுத்த வேண்டிய நிலையும் உருவாகும் என்றும், ஆகையால் அந்த பொட்டல உரிமம் பெறுவதற்கு இணையதளத்தில் விண்ணப்பம் செய்ய அதற்குரிய ஆவணங்களும், விண்ணப்ப கட்டணமாக ரூ.500/-, மேற்படி பொட்டல உரிமம் பெற ஏற்பாடு செய்வதற்கு தனக்கு தனியாக ரூ.14,500/-

ஆக மொத்தம் ரூ.15,000/- கொடுக்க வேண்டும் என்றும், அபராத தொகையாக விதிக்கக்கூடிய ரூ.5,000/-ஐ விரைவில் கொண்டு வந்து கொடுக்குமாறு கூறி அனுப்பி வைத்தார். ஆகையால், மேற்படி திருமதி.சாந்தி அவர்கள், அவருக்கு தனியாக கேட்ட ரூ.14,500/- பணத்தை தவிர்த்து, அபராத தொகை ரூ.5,000/-, பொட்டல உரிமம் பெறுவதற்குரிய விண்ணப்ப கட்டணம் ரூ.500/- மற்றும் பொட்டல உரிமம் பெறுவதற்குரிய ஆவணங்களுடன் கடந்த 29.12.2025 அன்று மாலை சுமார் 04.30 மணியளவில் அருப்புக்கோட்டை தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த தொழிலாளர் உதவி ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்களை சந்தித்தேன். அப்போது நான் அவரிடம், அபராத தொகை ரூ.5,000/-, பொட்டல உரிமம் பெறுவதற்குரிய விண்ணப்ப கட்டணம் ரூ.500/- மற்றும் பொட்டல உரிமம் பெறுவதற்குரிய ஆவணங்கள் ஆகியவை மட்டும் கொண்டு வந்துள்ளதாக கூறி, அவற்றை அவரிடம் கொடுத்தேன். அதற்கு அவர், என்னங்க பொட்டல உரிமம் பெற ஏற்பாடு செய்வதற்கு எனக்கு தனியாக செலவுக்கு கேட்ட ரூ.14,500/- கொண்டு வாலையா என்று கேட்டுவிட்டு, அபராத தொகை ரூ.5,000/-ஐ மட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றை என்னிடம் திரும்ப கொடுத்துவிட்டார். பின்னர் நான் அவரிடம், மேடம் இந்த 5000 பணத்தையும், விண்ணப்ப கட்டணத்திற்குரிய 500 பணத்தையும் ரெடி பண்ணவே ரொம்ப கஷ்டப்பட்டுட்டேன் மேடம், நீங்க பார்த்து அப்ளை பண்ணி எனக்கு பொட்டல உரிமம் கிடைக்க ஏற்பாடு பண்ணுங்க மேடம் என்று சொன்னேன். அதற்கு அவர், எனக்கு தனியா நான் கேட்ட ரூ.14,500/- பணத்தையும் சேர்த்து கொண்டு வந்து கொடுத்தீங்கன்னாதான், பொட்டல உரிமம் கிடைக்க இணையதளத்தில அப்ளை பண்ணி, உரிமம் கிடைக்க ஏற்பாடும் செய்வேன், நீங்க கொடுத்த அபராத தொகை ரூ.5,000/- பணத்திற்கு தொழிலாளர்துறை உதவி ஆணையாளரிடமிருந்து உத்தரவு வந்ததும் ரசீது தருகிறேன் என்று கூறி அனுப்பி வைத்தார். பின்னர் கடந்த 27.01.2026 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் அருப்புக்கோட்டை தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று, தொழிலாளர் உதவி ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்களை சந்தித்து, ஏற்கனவே கொடுத்த அபராத தொகைக்குரிய ரசீது பற்றியும், பொட்டல உரிமம் பெறுவதற்கு அப்ளை செய்வது சம்மந்தமாகவும் கேட்டேன். அதற்கு அவர், அபாரத தொகை சம்மந்தமாக தொழிலாளர்துறை உதவி ஆணையாளரிடமிருந்து உத்தரவு இன்னும் வரவில்லை, அதனால் ரசீது தற்போது தர இயலாது என்றும், பொட்டல உரிமம் சம்மந்தமாக விண்ணப்ப கட்டணம் ரூ.500/- உட்பட நான் கேட்ட ரூ.15,000/- பணத்தை கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டு, அந்த ரூ.15,000/- பணத்தை கொண்டு வந்து கொடுத்தால்தான் அப்ளை பண்ணி பொட்டல உரிமம் கிடைக்க ஏற்பாடு செய்வேன் என்று கூறி அனுப்பி வைத்தார். பின்னர் மீண்டும் நேற்று (02.03.2026) மாலை சுமார் 04.30 மணியளவில் அருப்புக்கோட்டை தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று, தொழிலாளர் உதவி ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்களை சந்தித்து, ஏற்கனவே

கொடுத்த அபராத தொகைக்குரிய ரசீது பற்றியும், பொட்டல உரிமம் பெறுவதற்கு அப்ளை செய்வது சம்மந்தமாகவும் கேட்டேன். அதற்கு அவர், அபாரத தொகை சம்மந்தமாக தொழிலாளர்துறை உதவி ஆணையாளரிடமிருந்து உத்தரவு வந்துவிட்டது என்று, அந்த உத்தரவை காண்பித்துவிட்டு, ரசீது பின்னர் போட்டு தருகிறேன் என்றும், பொட்டல உரிமம் சம்மந்தமாக விண்ணப்ப கட்டணம் ரூ.500/- உட்பட நான் கேட்ட ரூ.15,000/- பணத்தை கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டு, அந்த ரூ.15,000/- பணத்தை கொண்டு வராம, சும்மா சும்மா ஆபீசுக்கு விண்ணப்ப கட்டணத்தோட மட்டும் வராதீங்க, என்ன நினைச்சுகிட்டு இருக்கீங்க என்றும், பொட்டல உரிமம் சம்மந்தமாக விண்ணப்ப கட்டணம் ரூ.500/- உட்பட நான் கேட்ட ரூ.15,000/- பணத்தோட ஆபிசுக்கு வந்தா வாங்க, இல்லைன்னா ஆபீசு பக்கம் வராதீங்க என்று கடுமையாக பேசினார். ஆகையால் வேறு வழியில்லாமல், அப்போது அவரிடம் சரிங்க மேடம், ரெடி பண்ணிட்டு வரேன் மேடம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் வீட்டிற்கு வந்து யோசனை செய்து பார்த்ததில், நியாயமாக செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம ஏன் அவருக்கு லஞ்சப்பணம் கொடுக்கணும்னு நினைச்சுகிட்டு, அவருக்கு லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லாமல், எனது M.C சூப்பர் மார்க்கெட்டில் விற்பனை செய்யக்கூடிய பொட்டல பொருட்களுக்கு பொட்டல உரிமம் பெற இணையதளத்தில் விண்ணப்பம் செய்து உரிமம் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு, என்னிடம் விண்ணப்ப கட்டணம் ரூ.500/- உட்பட ரூ.15,000/- லஞ்சப்பணம் கேட்ட அருப்புக்கோட்டை தொழிலாளர் உதவி ஆய்வாளர் திருமதி.சாந்தி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.(sd) R.SANKARANARAYANAN 3/3/26 Sir, Received the complaint on 03.03.26 at 16.45 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.2/26 u/s 7 of the PC Act 1988 as amended 2018 on 03.03.26 at 18.30 hrs and took up for investigation. (Sd) (R.BOOMINATHAN) 3/3/26 Insp of police, V&AC,VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Virudhunagar District at Srivilliputhur and copies submitted to the concerned officers.